
சிவமயம்



04 - 12 - 1987 அன்று

வீரமரணமடைந்த

சோமசுந்தரம்

**ராஜன்** (விஷ்ணுபாலன்)

அவர்களது

# நினைவு மலர்.

# சோமசுந்தரம் ராஜன்
## (விஷ்ணுபாலன்)
## அவர்கள்



மண்ணில் மலர்வு
23-01-1972

மனத்தில் நிறைவு
04-12-1987

# இன வெறிக்கரங்களால் தமிழினத்தின் குரல்வளை நெரிக்கப்படுவது கண்டு துடித்தெழுந்த கொள்கை வீரனான ஓர் இளம் காளையின் வீர வரலாறு இது.

15 வயதிற்குள்ளேயே ஒரு புறநானூற்றுச் சித்திரமானவன் இவன். திட்டமிட்ட ஒடுக்கு முறைகளால் நமது மக்கள் செத்தொழிந்து கொண்டு இருந்த உச்ச வேளையிலே 85-ம் ஆண்டின் இறுதியிலே ஒடுக்கும் கரங்களை உடைக்கும் பணியிலே நடைபோட்டு வந்த நாயகர்களுடன் இணைந்து கொண்டான். பால் மணம் மறந்து பல காலம் இருக்காது. பள்ளிப் பருவத்திலே 13 வயதிலேயே பயிற்சியும் பெற்று புலி ஆனான். வெள்ளை என்றும் ரூகன் என்றும் விருப்பமுடன் அழைக்கப் பட்டான்.

நாளுக்கு நாள் நமது வீதிகளில் நடைபோட வெளியேறிவரும் இராணுவத்தை முகாம்களுக்குள் முடக்கும் முயற்சியிலே முன் நின்றான். மக்களைக் காப்பதற்கே முனைந்து நின்றான். வெற்றி கண்டான்.

87ல் நம்மண்ணை ஆக்கிரமிக்க நடந்த கொடூரப் பேரிலே வடமராட்சிக் களத்திலே அவன் சாதித்தவைகள் ஏராளம். அதைத் தொடர்ந்து களைகள் விலக்கிய பயிராக உறுதி பெற்றான் இந்த மண்ணை மீண்டும் பெற இயன்றதெல்லாம் அவன் செய்தான். நெல்லியடிக் களத்திலே தன் மூத்த தோழர்களுக்கு தோள் கொடுத்து வெற்றிக் கோலமிட்டான்.

வல்லரசு நாடுகளின் அரசியல் வானிலேயே அனுபவம் இல்லா பேதைகளின் ஆணவங்களைக் கண்டும் அறியாப் பருவத்தில் அரசியல் முதிர்ச்சி பெற்ற இவன் அரசியல் வாதிகளின் ஒப்பந்த மாயையை மதிக்க மறுத்தான். இதனால் நிராயுதபாணியாக நோயுற்று தனித்திருந்த போது வேலி என்று கூறி வந்த வேட்டைக் காரர்களுக்குப் பலியானான். இன வெறியர்களிடம் இழக்காத இன்னுயிரை ஆக்சிரமிப்பாளரிடம் இழந்து நின்றான். எதிரியிடம் சரணடையாத வேங்கை, "களத்தில்" இன்னுமொரு புது அத்தியாயம் எழுதிச் சென்றான்.

# வீரனெம் வெள்ளை ரேகன்!

விடுதலை யுணர்வு தூண்ட விரைந்துவன் களத்தில் மாற்ருர்
படைகளை யழித்துக் காத்தாய் பாரதச் சழக்க ருன்னைப்
படுகொலை புரிந்த போது, பண்பிலார் செயலைக் கேட்டு
அடுபுலி மறவா! எங்கள் ஆவியுந் துடித்த தையா!

மறந்தனை யுணவு சுற்றம் மறந்திலை தமிழர் வாழ்வு
சிறந்தனை எமது ளத்தில் தீமைக ளகற்றி யார்க்கும்
அறந்தனை வளர்த்த கோவே! அடிமைகட் டறுக்கு முன்னே
இறந்தனை யென்ற போதிங் கென்படுந் தூயோர் நெஞ்சே!

வீரனெம் வெள்ளை ரேகன் விஷ்ணு பால னென்று
யாருமே புகழ்வர் நீதா னியற்றிய தியாக மாளா
பாருளே யுன்றன் தூய இறப்பினிற் பிறப்பர் பல்லோர்
போரிலே வெல்வ ரிங்குப் புலிக்கொடி பறக்கு முண்மை!

அந்தநாள் உதய மாகு மாதவன் கதிர்கள் தோறும்
சிந்ரையிற் சிறந்தாய் நின்றன் திருமுக மொளிருங் கண்டே
வந்தனை செய்யு மீழம் வாழ்த்திடு முன்னை! வீர
மைந்தரை வரலா றென்று மறந்திடா துயர்ந்து மன்றே!

புலோலி

03-0 -1988

அன்பன்

வீ. பரந்தாமன்

★

# உன் உறக்கம்.....

பாடித்திரிந்த ஓர் சுதந்திரப் பூங்குயில் – றோகன்
இன்றுபாடாது ஓய்ந்ததென்னவோ
பாய்ந்து திரிந்த ஓர் விடுதலை வேங்கை
இன்று பார் தனில் உறங்கியதேனோ.

பாதை வகுத்த இளம் தீப்பந்தம் ஒன்று
பாதியில் அணைந்த தென்னவோ
விதி யென்று சொல்லிவிட வழியில்லை
உன் உறக்கம் வீணர்களின் வெறியாட்டமன்றோ.

ஓயவில்லை உன்பாடல்
ஒலிக் கின்ற தென்னமது
உறங்குவது உன் உடல்தான்
உறங்கவில்லை அதன் நினைவு.

உறங்கட்டும் உன் விழிகள்
நண்பா உறங்காது உன்மொழிகள்
மலர்கின்ற தமிழீழதாயகம் தேடி
நம்தீபந்தம் தொடரும்
என்றும் தீராது அதன்தாகம்.

*R. S.* ஆனந்தன்

# அணையாத தீபமே!

தமிழினத்தின் தரித்திர நிலைமாற்றப் புறப்பட்டு
தம்பியின் பாசறையில் தரமாக வளர்க்கப்பட்டு
தங்களையே தியாகம் செய்துவிட்ட
தனயர்களின் பாதையிலே
பள்ளிப் படிப்பை பாதையிலே நிறுத்திவிட்டு
சொந்த பந்தத்தை அறுத்தெறிந்து விட்டு
உன்னுயிரையும் உவந்தளித்து விட்ட
உத்தம வேங்கையே – வெள்ளையே
உன்னை இனி எங்கு காண்போம்
வெள்ளையே நீ
பெயரில் மட்டுமில்லை வெள்ளை
மேனியில் மட்டுமில்லை வெள்ளை
உன் உள்ளமும் வெள்ளை தானே
களங்கமற்ற உன் சிரிப்பை எப்போது காண்போம்
நெஞ்சிலே ஈரமுமற்ற, ஏன்? வீரமுமற்ற
வீணர்களின் வெறிச் செயலுக்கு
இலக்கானாயோ ராஜனே
அமைதிப்படையால் சமாதியானாயோ
தியாக தீபங்களின் வரிசையிலே
ஏறிவிட்ட அணையாத தீபமே
மாதம் மூன்று ஆனாலும், உன்
நாதம் மறந்து போகுமோ
வருஷம் கோடி ஆனாலும், உன்
நேசம் சிதைந்து போகுமோ
அன்பான ரேகனே
உன் ஆத்மாவின் அந்தரங்கத்தை
நாங்கள் அறிந்து கொள்கின்றோம்
கயவர்கள் உன்னை அழிக்கலாம், ஆனால்!
உன் இலட்சியத்தை அழிக்க முடியாது
எம் மக்களின் நலத்துக்காய் அணைந்தாயோ
அம் மக்களின் விடிவு வெகுதூரத்தில் இல்லையடா.

*K சிவதாஸ்*

# நீயும் ஓர் நாயகன்

நம் சரித்திரத்திலே பல கதாநாயகர்கள்
அதில் சேர்ந்து விட்டாய் நீயும் ஒரு நாயகனாய்
இன்னலுறும் தமிழினத்தின் துயர் துடைக்க
வீறு கொண்டாய் நீயும் ஒரு வேங்கையாக
சாதனைகள் பல புரிந்து வந்த நீ — இன்று
ஒரு சரித்திரமாய் ஆகிவிட்டாய்.

உடல் நலம் குன்றி நீ ஊனுமின்றி
சோர்வுற்று இருக்கையிலே
உன் உயிரை மாய்த்துவிட எண்ணினார்களோ
அந்த ஆதிக்க வெறியர்கள்
ஆனால் நீயோ
மறத் தமிழன் மரபில் வந்த வீரப்புலி நான்
என்று உன் நெஞ்சினிலே ஏந்தினாயோ
துப்பாக்கி குண்டுதனை
நீ போரினிலே மாண்டாலும் கலங்கிடோம்
அநியாயமாக பறித்துவிட்டார்கள் உன் உயிரை பொறுக்கவில்லை

நீ மறைந்து இன்று மூன்று மாதங்கள் ஆகினாலும்
உன் நினைவோ அழியவில்லை எம் நெஞ்சைவிட்டு
நிழல் போல தொடருதே எமைத் தொடர்ந்து.

S. கிருபா

# புயலோடு சேர்த்தனரோ....

துரோகன் உன்னை சுட்டார்கள்
நீதான் சாகவில்லையே!
என்றும் வாழ்வாய்
தமிழ் ஈழமக்கள் நெஞ்சமதன்னில்
சதிகாரக் கூட்டத்தின் சடுதியான
—வேலையிது
சீறிய புலியின் சீற்றமடக்க சீக்கிரம் பார்த்த
—வேலையிதோ

சீற்றம் அடக்க நினைத்தோரின்
சிரம் அறுக்க துணிந்தோம் நாம்

அணையாத ஒளியாய் இருந்த உன்னை
கார்த்திகை ஒளியில் அழித்தனரோ
செந்தீயில் உன்தேகம் வெந்தாலும் — சுதந்திர
நம்தீயில் உன்தேகம் வாழாதோ.

பாதியில் பறித்தோர் தன் உயிரை
பாதையில் பறிக்க நாம் உள்ளோம் — நீ
பாதியில் காட்டிய வழிதனிலே
பயமின்றி செல்லவும் நாம் உள்ளோம்.

கவர்ச்சி மனிதன் என்றதனால்தான் — உனை
கரும்புலியில் புகுத்தினரோ
நேரில் போரிட முடியாதென்றோ — உனை
சுற்றி வளைத்து சுட்டனர்

தென்னாசிய வல்லரசின்
செம்மையான வேலையிதோ
ஆதரவு காட்ட வந்த
அமைதிப் படையுமிதுவோ

ஆய்க்கினைகள் அறியா உன்னை
அநியாயமாய் சுட்டனரோ
தென்றலோடு திரிந்த உன்னை — விண்ணேற்றி
புயலோடு சேர்த்தனரோ.

S. தேவா

# உன்னை இனி எங்கு காண்போம்...

தமிழினத்தின் விடுதலைக்காய்
உன்னுயிரை ஈந்த ராஜனே!
நண்பர்களால் வெள்ளையென அழைக்கப்படும்
வெள்ளை உள்ளம் கொண்டவனே
ரேகன் என்னும் வீரப்பெயர் பெற்றவனே
களங்கமற்ற உன்சிரிப்பை எப்போது பார்ப்போம்
உன்னை இனி எங்கு காண்போம்

ஈழமண்ணின் மீட்புக்காய் — உன்
கல்வியை பாதியில் நிறுத்தி விட்டு
இனிய வாழ்வை வெறுத்து விட்டு
சொந்த பந்தங்களை மறந்துவிட்டு
விடுதலை உணர்வுடன் செயல் பட்டு
உத்தமனாய் வாழ்ந்து விட்டு
எங்கேயடா மறைந்து விட்டாய்
உன்னைஇனி எங்கு காண்போம்

உடல் நலம் குன்றிய நிலையில் — உன்
அன்னையின் அருகினிலே...
ஆனந்தமாய் உறங்குகையில்
அன்னியப் படைகள் உன்னை
அவலமாகக் கொன்றனரோ
உன்னை இனிஎங்கு காண்போம்

தமிழீழத்தின் விடிவு வெகுதூரத்தில் இல்லையடா.
எமது தமிழீழம் விடிவைநோக்கி விரையுதடா.
தமிழீழம் மலரும் வேளையிலே — உன்
திறமையும் தியாகமும் புகழும்
காற்றுப் பரவும் பொழுதினில்
உன் அன்னையின் துயரும் — எம்
துயரும் மாறுமடா
உன் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

K பிறேம்